## Test - 7th Civics Term 1 unit 2. அரசியல் கட்சிகள்

**சரியான விடையைத் தேர்வு செய்க**

1. இரு கட்சி முறை என்பது —-----------

அ) இரண்டு கட்சிகள் அரசாங்கத்தை நடத்துவது

ஆ) இரண்டு உறுப்பினர் ஒரு கட்சியை நடத்துவது.

இ) இரண்டு பெரிய அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவது.

ஈ) இவற்றுள் எதுவும் இல்லை.

2. இந்தியாவில் காணப்படும் கட்சி முறை

அ) ஒரு கட்சி முறை ஆ) இரு கட்சி முறை

இ) பல கட்சி முறை ஈ) இவற்றுள் எதுவுமில்லை

3. அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கும் அமைப்பு—-

அ) தேர்தல் ஆணையம் ஆ) குடியரசுத் தலைவர்

இ) உச்ச நீதிமன்றம் ஈ) ஒரு குழு

4. அரசியல் கட்சிகள் பொதுவாக எதன் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகின்றன?

அ) சமயக் கொள்கைகள் ஆ) பொது நலன்

இ) பொருளாதார கோட்பாடுகள் ஈ) சாதி

5. ஒரு கட்சி முறை எங்கு நடைமுறையில் உள்ளது?

அ) இந்தியா ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

இ) பிரான்ஸ் ஈ) சீனா

6. மக்களாட்சியின் முதுகெலும்பாகத் திகழ்வது .------------

அ) தேர்தல் ஆணையம் ஆ) குடியரசுத் தலைவர்

இ) உச்ச நீதிமன்றம் ஈ) அரசியல் கட்சிகள்

7. நமது நாட்டின் ஒவ்வொரு கட்சியும் என்ற அமைப்பில் பதிவு செய்தல் வேண்டும்.

அ) தேர்தல் ஆணையம் ஆ) குடியரசுத் தலைவர்

இ) உச்ச நீதிமன்றம் ஈ) அரசியல் கட்சிகள்

8. அரசியல் கட்சிகள் —------மற்றும்—------ இடையே பாலமாக செயல்படுகின்றன.

அ) முதல்வர் , கொள்கை வகுப்பாளிகள் ஆ) குடிமக்கள் , முதல்வர்

இ) குடிமக்கள் , கொள்கை வகுப்பாளிகள் ஈ) முதல்வர் , வேட்பாளர்கள்

9. ஒரு பதிவு செய்யப்பட்ட ஆனால் —-------- அரசியல் கட்சி தேர்தலில் தாங்கள் விரும்பும் சின்னத்தில் போட்டியிட முடியாது .

அ) அங்கீகரிக்கப்பட்டாத ஆ) தேசிய இ) மாநில ஈ) சிறிய

10 . எதிர்க்கட்சித் தலைவர் —---------அந்தஸ்தில் இருப்பார்.

அ) அமைச்சர் ஆ) சீனியர் இ) கேபினட் அமைச்சர் ஈ) முதல்வர்

youtube.@Gurumani24

LIVEWORKSHEETS

11. பொருத்துக

1. மக்களாட்சி – அ. அரசின் கொள்கைகளை விமர்சிப்பது

2. தேர்தல் ஆணையம் – ஆ. அரசாங்கத்தை அமைப்பது

3 . பெரும்பான்மைக் கட்சி – இ. மக்களின் ஆட்சி

4. எதிர்க்கட்சி – ஈ. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்

அ) 1 - ஆ, 2 - அ, 3 - ஈ, 4 - இ ஆ) 1 - இ, 2 - ஈ, 3 - ஆ, 4 - அ

இ) 1 - அ, 2 - ஆ, 3 - ஈ, 4 - இ ஈ) 1 - இ, 2 - ஈ, 3 - அ, 4 - ஆ

12. பின்வரும் கூற்றுகளில் சரியானதை தேர்வு செய்க

அ)நாட்டில் உள்ள ஒவ்வொரு கட்சியும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

ஆ) தேர்தல் ஆணையம் அனைத்து கட்சிகளையும் சமமாக நடத்துகிறது.

இ) தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு தனி சின்னத்தை ஒதுக்குகிறது.

ஈ) இவை அனைத்தும்.

13. கூற்று : பெரும்பான்மை கட்சி ஒரு நாட்டின் சட்டங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

காரணம் : தேர்தலில் பிற கட்சிகளைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது ஆகும்.

அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்

ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

இ) காரணம் தவறு, கூற்று சரி

ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

14. ஒதுக்கப்பட்ட சின்னம், ஒதுக்கப்படாத சின்னங்கள் என்று தேர்தல் சின்னங்கள் வகைபடுத்தப்பட்ட ஆண்டு —-----

அ) 1965 ஆ) 1975 இ) 1978 ஈ) 1968

15. எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத சூழலில் அமைக்கப்படும் அரசாங்கம் —-------

அ) எதிர் கட்சி அரசாங்கம் ஆ) சிறிய கட்சி அரசாங்கம்

இ) கூட்டணி அரசாங்கம் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

16. —-- தேர்தல் அல்லது —------ மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தலில் செல்லத்தக்க மொத்த வாக்குகளில் ஒரு கட்சி 6% வாக்குகளை பெற்றிருந்தால் அது தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்படும் .

அ) மாநிலங்களவை , நான்கு ஆ) மக்களவை , ஆறு

இ) மாநிலங்களவை , ஆறு ஈ) மக்களவை , நான்கு

youtube: @Gurumani24

LIVEWORKSHEETS

17. எந்த கட்சியிலும் சேராமல் , தானாக மக்களவை அல்லது மாநில சட்ட மன்ற தேர்தலில் போட்டியிடும் நபர் —- எனப்படுவார்.

அ) சுயேட்சை வேட்பாளர் ஆ) மாநில கட்சி வேட்பாளர்

இ) தேசிய கட்சி வேட்பாளர் ஈ) சிறிய கட்சி வேட்பாளர்

18. கூற்று I : இருகட்சி ஆட்சி முறை நடைபெறும் நாடு "இங்கிலாந்து "

கூற்று II : பல கட்சி ஆட்சி முறை நடைபெறும் நாடு "சுவீடன் "

மேற்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

அ) I மட்டும் ஆ) II மட்டும்

இ) I & II இரண்டும் சரி ஈ) I & II இரண்டும் தவறு

19. பல கட்சி ஆட்சி முறை நடைபெறும் நாடு / நாடுகளைத் தேர்வு செய்க:

அ. வட கொரியா , நார்வே ஆ. நார்வே , அமெரிக்கா

இ. பிரான்ஸ் ஈ . கியூபா , பிரான்ஸ்

20. ஆளுங்கட்சியின் தன்னிச்சையான போக்கை கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்த அமைப்பு —-

அ) தேர்தல் ஆணையம் ஆ) உள்ளாட்சி அமைப்பு

இ) அரசியல் கட்சிகள் ஈ) எதிர் கட்சி

youtube: @Gurumani24

LIVEWORKSHEETS